செ.வெ.எண்: 46 நாள்: 23.01.2020

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

---

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலக முத்து அரங்கில், விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், இன்று (23.01.2020) நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு, விவசாயிகளிடமிருந்து பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை பெற்றுக்கொண்டார்.

மேலும், 2019ம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்பட்ட 215 மனுக்களில் வேளாண்மை சார்ந்த 148 மனுக்களும், பிறதுறைகளை சார்ந்த 67 மனுக்களுக்கும் சம்பந்தப்பட்ட அலுவலர்களால் விவசாயிகளுக்கு பதில்கள் அளிக்கப்பட்டது. தூத்துக்குடி மாவட்டத்தில் இயல்பான மழையளவு 662.20 மி.மீ, 2020ம் ஆண்டு ஜனவரி மாதம் முடிய இயல்பான மழையளவு 38.90 மி.மீ ஆகும். 21.01.2020 வரை 3.51 மி.மீ மழை கிடைக்கப்பெற்றுள்ளது.

மேலும், 21.01.2020 அன்று வரை பாபநாசம் அணை கொள்ளவு 143 அடி, இருப்பு 131.85 அடியாகவும், மணிமுத்தாறு அணை கொள்ளவு 118 அடி, இருப்பு 109.90 அடியாகவும், சேர்வலாறு அணை கொள்ளவு 156 அடி, இருப்பு 129.46 அடியாகவும் உள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

ஒவ்வொரு மாதமும் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நடத்தப்பட்டு விவசாயிகளிடம் இருந்து பெறப்பட்ட பல்வேறு கோரிக்கை மனுக்கள்மீது துறை அலுவலர்கள் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விவசாயிகளுக்கு எடுத்து கூறப்படுகிறது. மேலும் பிற துறைகளை சார்ந்த மனுக்களின்மீதும் நடவடிக்கைகள் குறித்தும் தெரிவிக்கப்படுகிறது. இந்த வருடத்திற்கான முதல் கூட்டம் இன்று சிறப்பாக நடைபெற்று வருகிறது. கடந்த ஆண்டு மழை அளவு இயல்பு அளவைவிட 35 சதவிதம் அதிக அளவில் பெறப்பட்டுள்ளது. குறிப்பாக வடகிழக்கு பருவமழை 68 சதவிதம் அதிகமாக பெய்துள்ளதுள்ளதால் கோடை காலத்தில் தேவையான குடிநீர் கிடைக்கும். பாபநாசம் நீர்தேக்கத்திற்கு நீர்வரத்து 394 அடியாக உள்ளது. குடிநீர் மற்றும் பாசனத் தேவைக்காக 1404 கன அடி நீர் திறந்து விடப்படுகிறது. மேலும் மணிமுத்தாறு நீர்தேக்கத்திற்கு நீர்வரத்து 139 அடியாக உள்ளது. பாசனத் தேவைக்காக 475 கன அடி நீர் திறந்து விடப்படுகிறது. பிரதம மந்திரி பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் 2017-2018ம் ஆண்டில் பயிர் காப்பீடு செய்ததில் நெல் I, நெல் II, உளுந்து, பாசிப்பயறு, மக்காச்சோளம், கம்பு, சோளம், மிளகாய், வெங்காயம் மற்றும் பருத்தி ஆகிய பயிர்களுக்கு மொத்தம் ரூ.84.71 கோடி இழப்பீட்டுத்தொகை பயனாளிகளின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

பிரதம மந்திரி பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் 2018-2019ம் ஆண்டில் பயிர் காப்பீடு செய்ததில் நெல் I, நெல் II பயிருக்கு ரூ.2.14 கோடி இழப்பீட்டுத்தொகையும், மக்காச்சோளம் பயிருக்கு இதுவரை 74,375 விவசாயிகளுக்கு ரூ.106.34 கோடி இழப்பீட்டுத்தொகையும் பயனாளிகளின் வங்கி கணக்கில் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. மேலும் இதர பயிர்களுக்கு காப்பீடு தொகை விரைவில் கிடைக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மிளகாய், வெங்காயம் ஆகிய பயிர்களுக்கு இழப்பீட்டுத்தொகை இதுவரை கிடைக்காத விவசாயிகளுக்கு விரைவில் கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டு திட்டத்தில் இணையாத விவசாயிகள் இத்திட்டத்தில் தங்களை இணைத்துக்கொண்டு காப்பீட்டு தொகையை செலுத்தி பயன்பெற வேண்டும். மத்திய, மாநில அரசின் உத்தரவுப்படி நமது மாவட்டத்தில் பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டு திட்டம் செயல்படுத்துவது தொடர்பாக மாவட்ட அளவிலான குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த குழுவினரிடம் காப்பீட்டுத்தொகை இதுவரை கிடைக்காத தகுதிவாய்ந்த விவசாயிகளும் மனுக்கள் அளித்து பயன்பெறலாம். ஆதார் தவறுதலாக உள்ள விவசாயிகள் பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டு திட்டம் இணையதளத்தில் தங்களது ஆதார் எண்ணை சரிசெய்து காப்பீட்டுத்தொகை பெற்றுக்கொள்ளலாம் அல்லது இ-பொது சேவை மையத்தில் ஆதார் எண்ணை சரிசெய்து பயன்பெறலாம். உழவன் செயலி மூலம் மத்திய, மாநில அரசின் திட்டங்கள் குறித்து விவசாயிகள் நன்றாக தெரிந்துகொள்ள

வேண்டும். மேலும், தற்போது அறிவிக்கப்பட்டுள்ள முக்கிய திட்டங்கள் குறித்தும் தெரிந்துகொள்ள இந்த செயலி மிகவும் பயனுள்ளதாக இருக்கும். கடந்த ஆண்டு பெய்த கனமழையின் காரணமாக பயிர், உளுந்து, வெங்காயம் உள்ளிட்டவைகளுக்கு இழப்பீடு கணக்கிடுவதற்கு வருவாய் துறை அலுவலர்கள், வேளாண்மைத்துறை அலுவலர்கள், புள்ளியியல் துறை அலுவலர்கள் ஆய்வு செய்து அறிக்கை தயாரித்து அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஆழ்வார்திருநகரில் ரூ.25.6 கோடி மதிப்பில் தடுப்பணை கட்டுவதற்கு விரைவில் அரசாணை வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆண்டு குடிமராமத்து திட்டத்தின்கீழ் கடம்பாகுளத்தில் ரூ.50 லட்சத்தில் தூர்வாறும் பணிகள் மற்றும் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சாத்தான்குளத்தில் பெறும்புத்தூர் குளத்தினை ஆழப்படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்பட உள்ளது. கோரம்பள்ளம் கண்மாயிலிருந்து உப்பாத்து ஓடையின் கரையினை ரூ.27.50 லட்சம் மதிப்பில் பலப்படுத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிரந்தரமாக தூர்வாரி பலப்படுத்திட ரூ.58.50 கோடி மதிப்பீடு தயார் செய்து அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் சம்பா பயிரில் ஆனைக்கொம்பன் ஈ தாக்குதல் குறித்தும், புகையான் தாக்குதல் மேலாண்மை குறித்தும் துண்டு பிரசுரங்களை விவசாயிகளுக்கு வழங்கினார்.

இக்கூட்டத்தில், கூடுதல் ஆட்சியர் (வருவாய்) திரு.விஷ்ணு சந்திரன், இ.ஆ.ப., தூத்துக்குடி சார் ஆட்சியர் திரு.சிம்ரோன் ஜீத் சிங் காலோன், இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் திரு.தனபதி, கோட்டாட்சியர்கள் திருமதி விஜயா (கோவில்பட்டி), செல்வி.தனப்ரியா (திருச்செந்தூர்), இணை இயக்குநர் (வேளாண்மைத்துறை) திரு.முகைதீன், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு.பாலசுப்பிரமணியன், பொதுப்பணித்துறை நீர்வள ஆதார அமைப்பு தாமிரபரணி கோட்ட செயற்பொறியாளர் திரு.அண்ணாத்துறை, தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் திருமதி.சரஸ்வதி, துணை இயக்குநர் (வேளாண்மைத்துறை) திரு.ஆசிர் கனகராஜன் மற்றும் அலுவலர்கள், விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி மாவட்டம்.**